## கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேட்டி – சேலைகள் உற்பத்திக்கு

# நிர்ணயிக்கப்பட்ட தரத்திலான நூல் ரகங்கள் மட்டுமே வழங்கப்படுகிறது!

### வேட்டி–சேலை வழங்கும் திட்டம் தொடர்பாக – எடப்பாடி பழனிச்சாமியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டை மறுத்து – அமைச்சர் ஆர்.காந்தி பதிலடி!



**சென்னை, டிச.6-**

**கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டம் தொடர்பாக 04.12.2025 அன்று அறிக்கை வெளியிட்ட சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி பதிலடி கொடுத்துள்ளார்.**

**அது தொடர்பான அறிக்கையில் அமைச்சர் ஆர்.காந்தி, “கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேட்டி - சேலைகள் உற்பத்திக்கு, நிர்ணயிக்கப்பட்ட தரத்திலான நூல் ரகங்கள் மட்டுமே வழங்கப்படுகிறது” என ஆதாரங்களுடன் விளக்க மளித்துள்ளார்.**

அமைச்சர் ஆர். காந்தியின் அறிக்கை வருமாறு:

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் 04.12. 2025 தேதியிட்ட அறிக்கையில், வேட்டி சேலை வழங்கும் திட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியின் மீதான மறுப்பறிக்கை பின்வருமாறு:

தமிழ்நாட்டில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பண்டிகையின் போது வேட்டி சேலைகள் வழங்கும் நோக்கத்துடனும், மாநிலத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் சீரிய நோக்கத்துடனும் ஒவ்வொரு ஆண்டும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2,800 கைத்தறி நெசவாளர்கள், 11,300 பெடல் தறி நெசவாளர்கள் மற்றும் 66,000 விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

வேட்டி சேலை உற்பத்திக்குத் தேவையான நூல்கள் கூட்டுறவு நூற்பாலைகள், தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 யினை பின்பற்றி தெரிவு செய்யப்படும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த நூல் இரகங்கள் அனைத்தும் அரசு நூல் கிடங்குகளில் பெறப்பட்டு, நூல் மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவை SITRA, Textile Committee மற்றும் NABL அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் தரப்பரிசோதனை செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட தரத்திலான நூல் இரகங்கள் மட்டுமே கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வேட்டி சேலைகள் உற்பத்திக்காக வழங்கப்படுகிறது.

தொடக்க கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நூல் பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்படும் பசைபோடும் மற்றும் பாவு ஓட்டும் ஆலைகள் (Warping and Sizing) மூலமாக, பாவு நூல்களுக்கு பசை போட்டு, பாவு ஓட்டி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உற்பத்திக்காக வழங்கப்படுகிறது.

சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்பட்டு, சங்கத்தில் வரவு வைக்கப்பட்ட வேட்டி சேலைகள் கோஆப்டெக்ஸ், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆகிய மூன்று முகமை நிறுவனங்களின் கொள்முதல் கிடங்குகளில் 100% தர ஆய்வு செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் கூடிய வேட்டி சேலைகள் மட்டுமே, மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பொங்கல் 2025 திட்டத்திலும் இம்முறையினை வழுவாமல் பின்பற்றப்பட்டது.

பொங்கல் 2025 திட்டத்திற்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் முகமை நிறுவனங்களில் கொள்முதல் செய்யப்பட்ட வேட்டி பண்டல்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் தரப்பரிசோதனையின்போது பாலிகாட் பாவு நூலில் நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளைவிட பாலியஸ்டர் சதவீதம் அதிகமாக உள்ளதென கண்டறியப்பட்ட சுமார் 13 இலட்சம் வேட்டிகள் கொண்ட பண்டல்கள், நிராகரிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட கொள்முதல் முகமை நிறுவனங்களிலேயே இருப்பாக வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிராகரிக்கப்பட்டுள்ள 13 இலட்சம் வேட்டிகளுக்குப் பதிலாக சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து, இதுவரை நிர்ணயிக்கப்பட்ட தரஅளவீடுகளுடன் கூடிய சுமார் 9 இலட்சம் வேட்டிகள் திரும்ப பெறப்பட்டுள்ளது. எஞ்சிய 4 இலட்சம் வேட்டிகளும் திரும்ப பெறப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, “தரமே தாரக மந்திரமாக” கொண்டு, தரமான வேட்டி சேலைகள் மட்டுமே பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு மிகவும் உறுதியாக உள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும். இந்த நிலைப்பாட்டில் தமிழ்நாடு அரசு எவ்வித சமரசமும் இல்லாமல், செயல்பட்டு வருகிறது.

உண்மைநிலை இவ்வாறிருக்க, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், நடப்பு பொங்கல் 2026 திட்டத்தின்கீழ் 17 இலட்சம் வேட்டிகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக உண்மைக்கு புறம்பான தவறான தகவலை தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்திற்கு தேவையான வேட்டி சேலை அனைத்தும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மட்டுமே உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வரும் நிலையில், வேட்டி சேலைகள் வெளிமாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுவதாக எவ்வித ஆதாரமற்ற, முற்றிலும் உண்மைக்கு புறம்பான தவறான தகவலை தெரிவித்துள்ளார்.

வேட்டி சேலை வழங்கும் திட்டம் தொடர்பாக, என்னால் பலமுறை விளக்கமான பதிலறிக்கை கொடுத்த பின்னரும், அதனை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல், சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லி, அரைத்த மாவையே அரைத்து, புளித்த அரசியல் செய்து வருகிறார்.

கடந்த ஆட்சி காலத்தில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டி சேலைகள் இதுவரை பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக, முழுமையாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதே இல்லை. பெரும்பாலும் பிப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் வேட்டி சேலைகள் வருவாய் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த ஆட்சி காலத்தில், பொங்கல் 2012 திட்டத்திற்கு அக்டோபர் 2012 மாதத்திலும் (12.10.2012), பொங்கல் 2014 திட்டத்திற்கு ஆகஸ்ட் 2014 மாதத்திலும் (25.08.2014) மிகவும் காலதாமதமாக வருவாய் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதை எதிர்க்கட்சித் தலைவர் வசதியாக மறந்துவிட்டார் போல!

ஆனால், முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில், பொங்கல் 2024 திட்டத்திற்கான வேட்டி சேலைகள் முழுவதும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு,

31.12.2023 தேதிக்கு முன்னதாகவே அனைத்து தாலுக்கா அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத வகையில் பொங்கல் பண்டிகைக்கு முன்னர் பொது மக்களுக்கு விநியோகம் செய்து திட்டம் நிறைவு செய்யப்பட்டு, சாதனை செய்யப்பட்டது.

நடப்பாண்டு பொங்கல் 2026 திட்டத்திற்கான வேட்டி சேலைகள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, நாளது தேதிவரை 93% வேட்டி சேலைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 100% வேட்டி சேலைகளும் இத்திட்ட வரலாற்றிலேயே முதல் முறையாக 15.12.2025க்குள் முழுமையாக அனுப்பி வைக்கப்பட்டு. பொங்கல் பண்டிகை முன்னதாக பொது மக்களுக்கு வழங்கி, திட்டம் நிறைவு செய்யப்படவுள்ளது.

கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலைப் பாதுகாக்கவும், நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசால் வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் இதர கீழ்க்கண்ட சீரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

•இந்த அரசு பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வேட்டி சேலையினை பொதுமக்கள் அனைவரும் விரும்பி உடுத்தும் வகையில், பொங்கல் 2023ஆம் ஆண்டு முதல் சேலைகள் 15 புதிய வண்ணங்களிலும், வேட்டிகள் இன்ச் பார்டரினை ஒரு இன்ச் பார்டராக அதிகப்படுத்தி, 5 புதிய வண்ணங்களிலும் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது பொது மக்களிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

•கடந்த ஆட்சிக் காலத்தில் பொங்கல் 2017 முதல் 2021 வரை 5 ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த கொள்முதல் விலை நிர்ணய நிலுவைத் தொகை ரூ.148.71 கோடியினை சங்கங்களுக்கு விடுவித்து, அவற்றின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**●வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் நெசவுக் கூலி,**

பெடல்தறி சேலைகளுக்கு ரூ.69.79லிருந்து, ரூ.75.95 ஆகவும்,

பெடல்தறி வேட்டிகளுக்கு ரூ.59.28லிருந்து, ரூ.64.38 ஆகவும்,

விசைத்தறி சேலைகளுக்கு ரூ.43.01லிருந்து, ரூ.46.75 ஆகவும்,

விசைத்தறி வேட்டிகளுக்கு ரூ.24லிருந்து, ரூ.26.40 ஆகவும்

**கைத்தறி மற்றும் பெடல் தறிகளுக்கான Pre-Loom Wages**

சேலைகளுக்கு ரூ.26.67லிருந்து, ரூ.28 ஆகவும்,

வேட்டிகளுக்கு ரூ.12.36லிருந்து, ரூ.13 ஆகவும்,

கைத்தறி மற்றும் பெடல்தறி சேலைகளுக்கான சாயக் கட்டணம்

ரூ.130லிருந்து, ரூ.140 ஆகவும்,

22.05.2025 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**●பள்ளி சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ்,**

பெடல்தறி Casement இரகத்திற்கு, நெசவு கூலி மீட்டர் ஒன்றுக்கு,

ரூ.7.84லிருந்து, ரூ.8.40 ஆகவும்,

விசைத்தறி Drill இரகத்திற்கு, நெசவு கூலி மீட்டர் ஒன்றுக்கு,

ரூ.5.76லிருந்து, ரூ.6.40 ஆகவும்,

விசைத்தறி Casement இரகத்திற்கு, நெசவு கூலி மீட்டர் ஒன்றுக்கு,

ரூ.5.60லிருந்து, ரூ.6.16 ஆகவும்,

13.05.2025 முதல் உயத்தி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய இரண்டு திட்டங்களுக்கும், கூலி உயர்வானது

2019க்கு பின்னர், தற்போது கழக அரசினால் கூட்டுறவு சங்க நெசவாளர்களின் நலன் கருதி உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்க சாதனையாகும்.

●கைத்தறி நெசவாளர்களுக்கு, அனைத்து இரகங்களுக்கும், ஆண்டுதோறும் நெசவு கூலியில், 10% அடிப்படை கூலி மற்றும் 10% அகவிலைப்படி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.

●கைத்தறி நெசவாளர்களுக்கான இலவச மின்சாரம் 200 யூனிட்டிலிருந்து 300 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கான இலவசமின்சாரம்750யூனிட்டிலிருந்து 1000 யூனிட்களாகவும் 03.03.2023 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

●கைத்தறி நெசவாளர்களுக்கு, வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மானியத் தொகை ரூ.2.10 லட்சத்திலிருந்து, ரூ.4.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

●2025-26 ஆம் ஆண்டில், விசைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் ரூ.50.00 கோடி மானியத்துடன் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

●10 சிறிய அளவிலான கைத்தறிப் பூங்காக்கள் (Mini Handloom Parks), ஒரு பூங்காவிற்கு ரூ.5 கோடி மானியத்துடன் அமைக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த 4 ஆண்டுகளில், “எல்லோருக்கும் எல்லாம்” என்கிற கொள்கையுடன், எந்த குறையும் சுட்டிக்காட்ட முடியாத வகையில், அனைத்து மக்களின் ஆதரவுகளையும் பெற்றுள்ளது. இதனை பொறுத்துக்கொள்ள முடியாத, திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, கழக அரசின் சாதனைகளை குறை சொல்லும் நோக்கத்தில் உண்மைக்கு புறம்பான, அடிப்படை ஆதாரமற்ற, முன்னுக்குப்பின் முரணான செய்திகளை, அறிக்கையாக வெளியிடுவதையே வாடிக்கையாக கொண்டுள்ளார்.

தவறான செய்திகளை செவி வழி கேட்டு, வாய்க்கு வந்தபடி அறிக்கைகளை வெளியிட்டு, தமிழ்நாட்டு மக்கள் நலன் மீது எவ்வித அக்கறையும் இல்லாமல், சுய இலாபத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு, ஜால்ரா போடும், அடிமை பழனிசாமி, இனி மேலாவது மலிவான அரசியல் செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம். தண்டபாணி

### டிசம்பர் 6 (2012)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தென்சென்னை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், மாவட்ட பொருளாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும், மயிலைப் பகுதி துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

முரசொலி நாளிதழின் செய்தியாளராகவும் – மருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

### தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

**4 - 12 -2025**



**புதுடெல்லி, டிச. 6 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத் தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (4.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்புகள். தடுப்பதற்கு உடனடி தீர்வு என்ன?**

**ஆ. இராசா கேள்வி**



நாட்டில் 2024 ஆம் ஆண்டில் மட்டும் சாலை விபத்துகளால் 1,80, 000 உயிர்கள் இழந்ததை குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

சாலை விபத்து இறப்புகளை குறைக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) இலக்கை மீறாமலும் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் எந்த அளவுகோளில் இறப்பு விகிதங்கள் ஒப்பிடப்படுகிறது? வடிவமைப்பு குறைபாடுகள் கண்டறிந்து சரிசெய்யவும் அறிவியல் சாலைப் பாதுகாப்பு தணிக்கைகளை மேற்கொள்ளவும் முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுடன் பாதுகாப்பான சாலைகளைப் பொறியியல் ரீதியாக வழங்க அரசாங்கம் எடுத்த நட வடிக்கைகளின் விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் சாலைப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட மொத்த நிதி மற்றும் அவற்றின் செலவு விவரங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

**2. கீழடி ஆய்வு முடிவுகளை வெளியிடாதது ஏன்?**

**திருச்சி சிவா கேள்வி**

கீழடி ஆய்வு முடிவுகளை பதிப்பிக்க ஒன்றிய அரசு தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடுவதை குறிப்பிட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர், தொல்பொருள் ஆய்வு முடிவுகளை



உரிய நேரத்தில் பதிப்பிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? அறிக்கைகளை சமர்ப்பித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் வெளியிடுவதற்கு வழக்கமான காலக்கெடு என்ன? சரியான நேரத்தில் வெளியிடுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அமைச்சகம் வகுத்திருக்கும் கொள்கைகள் என்ன? கீழடி முடிவுகளை எப்போது வெளியிட திட்டமிட்டிருக்கிறது என பல்வேறு கேள்விகளையும் அவர் கேட்டுள்ளார்.

**3.கரையோர சதுப்பு நிலக்காடுகளின் பாதுகாப்பையும் மீனவர்களின் வாழ்வா தாரத்தையும் உறுதி செய்வீர்!**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**



தமிழ்நாட்டில் கரையோர சதுப்பு நில காடுகளிலிருந்து நிலையான வருமானத்தை உருவாக்கும் MISHTI திட்டம் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட மொத்த பரப்பளவு, மீட்டெடுக்கப்பட்ட மற்றும் மீட்டெடுக்கப்படும் பகுதிகள், நிறைவு செய்வதற்கான காலக்கெடு உட்பட பல்வேறு விசயங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார். மேலும் பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் மீட்டெடுக்கப்பட்ட சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளின் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் மீனவர்கள், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு முயற்சிகளின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4.நம் மீனவர்களை தண்டிக்கும் இலங்கை அரசை கண்டிக்க தவறும் மோடி அரசு**

**பி.வில்சன் கண்டனம்**



இந்திய மீனவர்களைக் குற்ற வாளிகளாக்கி அதிக அபராதம் விதிக்கும் 2023ஆம் ஆண்டு மீன்வள மற்றும் நீர் வாழ் வளங்கள் (திருத்தம்) சட்டத்தின் பிரிவுகள் 14(O) மற்றும் 49 குறித்து இலங்கை அரசிடம் ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்தியதா என கேட்டு திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான பேச்சு வார்த்தை மூலம் இந்தச் சட்டங்களை ரத்து செய்ய அல்லது திருத்தம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

2014 முதல் 3800 க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் இந்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேள்விகள் கேட்டுள்ளார்.

**5. நீதித்துறையில் சமூகநீதி இல்லாதது ஏன்?**

**ராஜாத்தி சல்மா கேள்வி**



உயர்நீதிமன்ற நீதிபதி களில் பிற்படுத்த ப்பட்ட பட்டியிலின மற்றும் சிறுபான்மை யினரின் பிரதிநிதித்துவம் 23 சதவீதம் மட்டுமே உள்ளது. மீதமுள்ள 77 சதவீதம் உயர் சாதி வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதை குறிப்பிட்டு முறையான பிரதிநிதித்துவம் அமையாதது ஏன் என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்கு போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதையும் உயர் நீதித்துறையில் இட ஒதுக்கீட்டைக் கொண்டுவருவதையும் கருத்தில் கொண்டு ஒன்றிய அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

**6.விபத்துகளை அதிகப்படுத்தும் பராமரிப்பு இல்லாத தேசிய நெடுஞ்சாலைகள்!**

**ஈஸ்வரசாமி குற்றச்சாட்டு**



கடந்த ஐந்து ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் விவரங்கள் கேட்டு திமுக பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

இந்தக் காலகட்டத்தில் நெடுஞ்சாலை விரிவாக்கம், மேம்படுத்தல் மற்றும் சாலைப் பாதுகாப்புக்காக அரசாங்கம் வகுத்திருக்கும் சிறப்புத் திட்டங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநில வாரியாக தேசிய நெடுஞ்சாலைகளில் பதிவான விபத்துகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் அடையாளம் காணப்பட்டுள்ள அதன் முக்கிய காரணங்கள் என்ன? மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்புகள் (ATMS) நிறுவப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளின் எண்ணிக்கை மற்றும் இடம் குறித்த விவரங்கள் அதற்கான மொத்த செலவுகளுடன் சேர்த்து எவ்வளவு? அனைத்து தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளுக்கும்

ATMS கவரேஜை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?